Alcohol and Drug
Information Centre
ADIC

No.40/18, Park Road, Colombo 05, Sri Lanka.
Tel: +94 11 2584416,+94 11 2592515, Fax: +94 112508484
Email: info@adicsrilanka.org
Web site: http//www.adicsrilanka.org

ஊடக செய்தி

24.06.2020

**எமது நாட்டிற்கே உரித்தான வரிப்பணத்தை தொடர்ந்தும் பிரித்தானியா, அமெரிக்கா புகையிலை நிறுவனத்திற்கு தாரைவார்த்துக் கொடுக்காமல் அரசாங்கத்திற்கு பெற்றுக் கொடுக்க, இம்முறை பாராளுமன்றத்திற்கு தெரிவாகப்போகும் வேட்பாளர்களுக்காவது முடியுமா?**

உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கொரோனா தொற்றினால் இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிகளை சந்தித்துள்ளது. நாட்டின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி, ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்தமை, சுற்றுலாப் பயணிகளின் வருகை தடை பட்டமையினால் ஏற்பட்ட வருமான வீழ்ச்சி, அந்நிய செலாவணியில் ஏற்பட்ட வீழ்ச்சி போன்றவை நாட்டின் பொருளாதார பின்னடைவிற்கு பிரதான காரணங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நேரடி காரணிகளினால் பாரிய நிதி நெருக்கடிக்கு ஆளாகியிருக்கும் எமது நாடு முறையான சிகரட் வரிக்கொள்கையொன்று இன்மையினால், சிகரட் உற்பத்தி நிறுவனத்தின் மூலம் கிடைக்கப்பெற்றிருக்க வேண்டிய பெருந்தொகை வரிப்பணத்தை இழந்துள்ளது. அதாவது கடந்த 05 வருடங்களிற்குள் அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்றிருக்க வேண்டிய ரூபா100 பில்லியன்களை இழந்துள்ளது.

இலங்கை அரசாங்கமானது, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதற்கு ரூபா100 பில்லியன்களை செலவழித்துள்ளது, விமான நிலைய அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதற்கு ரூபா39 பில்லியன்களை செலவழித்துள்ளது, மொரகாஹாகந்த நீர்த்தேக்கத்தின் மொத்த கட்டுமானத்திற்காக ரூபா 91 பில்லியன்களை செலவழித்துள்ளது. எமது நாட்டில் சிகரட்டிற்கான முறையான வரிக்கொள்கையொன்று இருப்பின் சீன நாட்டிடமோ அல்லது பிற நாடுகளிடமோ கடன்களை பெற்றுக் கொள்ளாமால் இது போன்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பலவற்றை எமது நாட்டிற்குள் செயற்படுத்தியிருக்கலாம். எனினும் பிரித்தானியா, அமெரிக்கா புகையிலை நிறுவனத்திற்கு பயனளிக்கும் வகையில் சிகரட் விலை அதிகரிப்பு மற்றும் வரி அறவிடப்படும் அளவு போன்ற தீர்மானங்களினால் எமது நாட்டிற்கு கிடைக்கப்பெறவேண்டிய பெருந்தொகை பணம் இழக்கப்படுகின்றது என்பது திண்ணம். கடந்த கால அரசாங்கங்களினால் இழைக்கப்பட்டுவந்த தவறு தொடர்ந்தும் இருந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் சிகரட் நிறுவனம் ஏகபோக உரிமையைக் கொண்டுள்ளமையினால், சிகரட்டின் சந்தை விலை மற்றும் வரி ஆகியவற்றை 2005ஆம் ஆண்டு வரை அரசாங்கத்தால் முறையான முறையில் நிர்ணயம் செய்யப்பட்டது.

இலங்கை புகையிலை நிறுவனம் எனும் பெயரில் இயங்கும் புகையிலை நிறுவனத்தின் 84.13 வீதமான பங்குகள் பிரித்தானியா மற்றும் அமெரிக்கா புகையிலை நிறுவனத்திற்கு சொந்தமானவை ஆகும்.

சிகரட்டிற்கான முறையான விலை நிர்ணயம், வரிக்கொள்கை போன்றன இல்லாத காரணத்தினால் கடந்த சில ஆண்டுகளாக, அமெரிக்கா மற்றும் பிரித்தானியா புகையிலை நிறுவனத்திற்கு இலாபம் அதிகரித்த விதம் கீழ்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

**வெவ்வேறு நிதியமைச்சர்களின் ஆட்சிகாலத்தில்,**

**சிகரட் உற்பத்தி மற்றும் புகையிலை நிறுவனம் பெற்ற இலாபம்**




சரியான விலை நிர்ணயம், வரிக்கொள்கை இல்லாத காரணத்தினால் இலங்கை மக்களிடம் இருந்து அமெரிக்கா மற்றும் பிரித்தானியா புகையிலை நிறுவனங்கள் பெருந்தொகை பணத்தை சூறையாடுகின்றனர். இதன் காரணமாக எமது நாட்டிற்கு சொந்தமாக வேண்டிய பணம் ஏனைய வல்லரசு நாடுகளுக்கு செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான தவறுகளிற்கு அரசியல்வாதிகள் காரணமாகின்றனரா? அல்லது நிதியமைச்சின் அதிகாரிகளின் அசமந்தப் போக்குகள் காரணமா? என கேள்வியெழுப்பப்பட வேண்டும். இதற்கு மத்திய வங்கி மற்றும் திறைசேரி ஆகியவையும் பொறுப்புக்கூற வேண்டும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கமானது நாட்டிற்கு நன்மை பயக்கக்கூடிய பொருளாதாரக் கொள்கையை உருவாக்க வேண்டும். மேலும் வெளிநாட்டு நிறுவனங்களிற்கும் ஏனைய வணிக உலகிற்கும் தேவையான விதத்தில் நாட்டின் வளங்கள் சூறையாடப்படுவதனை தடுத்தலுமாகும்.

வரி தொடர்பான தீர்மானங்கள் எடுக்கும் போது, பொது மக்களின் பணத்தில் சார்ந்திருக்கும் நிதியமைச்சின் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் தமக்குள்ள பிரதான பொறுப்பை தொடர்ந்தும் புறக்கணித்து வந்துள்ளமை தெளிவாகின்றது.

நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களும், அரசியல் கட்சிகளும் இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள போகின்றனர் என்பதை பொது மக்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டும். ஏனென்றால் இந்த விடயத்தை மையமாக வைத்து தீர்மனம் எடுக்கும் குறிப்பிட்ட அளவு வாக்காளர்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்கின்றனர்.

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்